பக்கங்கள் 17 + 04

மாலை முரசு

கனடா முரசு இணைப்பு

## வாகன விபத்தில் மூன்று பேர் காயம்

(எம்.எச்.எம் சியாஜ்)

புத்தளம் – குருநாகல் பிரதான வீதியின் கல்லடி பிரதேசத்தில் நேற்றிரவு இடம்பெற்ற வாகன விபத்தில் 04▶

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2055 சித்திரை 10 செவ்வாய்க்கிழமை 23.04.2024 அதிர்வு 267

# தலைமன்னாரில் இருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச் சென்ற முதியவர் நடுக்கடலில் சாவு!

(ந.லோகதயாளன்)

இந்தியாவின் பெங்களூர் மாநிலத்தைச் சேர்ந்த 31 பேர் கொண்ட நீச்சல் குழுவினர் நேற்று இராமேஸ்வரம் சங்குமால் கடற்கரையில் இருந்து தலைமன்னாருக்குப் படகு மூலம் வந்து இன்று அதிகாலை தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச் சென்றனர்.

இவ்வாறு தலைமன்னாரிலிருந்து தனுஷ்கோடிக்கு நீந்திச் சென்று கொண்டிருந்தபோது 76 வயதுடைய முதியவரான கோபால் ராவ் நீந்தத் தொடங்கிய 3 மணி நேரத்திலேயே உடல்நலம் பாதிக்கப்பட்டு படகில் ஏற்றப்பட்டபோது திடீரென நெஞ்சுவலி ஏற்பட்டுள்ளது.

நெஞ்சுவலியால் பாதித்தவரை வைத்தியர் பரிசோதித்தபோது முதியவர் உயிரிழந்தமையை உறுதி செய்தார்.

இதையடுத்து உயிரிழந்தவரின் உடல் தனுஷ்கோடி துறைமுகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு உடற்கூற்று ஆய்வுக்காக தமிழ்நாடு இராமேஸ்வரம் அரச மருத்துவமனையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் கடலில் நீந்திச் சென்ற முதிய வர் திடீரென உயிரிழந்த சம்பவம் சக நீச்சல் வீரர்களைச் சோகத்தில் ஆழ்த்தியுள்ளது.

# அநுரகுமாரவே அடுத்த எதிர்க்கட்சித் தலைவர்!

## சஜித் அணி ஆருடம்

**“எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் பிரதான எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை அநுரகுமார திஸாநாயக்க தலைமையிலான தேசிய மக்கள் சக்தியே பெறும்.”**

**- இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் சிரேஷ்ட உறுப்பினரும் எதிரணி பிரதம கொறடாவுமான லக்ஷ்மன் கிரியெல்ல எம்.பி. தெரிவித்தார்.**



இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறியதாவது:–

“கிராமிய மட்டத்தில் சஜித்துக்கு ஆதரவு அலை வீசுகின்றது. தம்மை அவர் பார்த்துக்கொள்வார் என மக்கள் உறுதியாக நம்புகின்றனர். எனவே, உள்நாட்டில் சஜித்தின் வெற்றி உறுதியாகியுள்ளது.

தேசிய மக்கள் சக்தி எமக்குச் சவாலாக அமையாது. ஆனாலும், மொட்டுக் கட்சியினரை விட கூடுதல் வாக்குகளைப் பெறுவார்கள். ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவுக்குரிய வாக்கு வங்கியில் ஒரு பகுதி எமக்கும் வரும்.

எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தலில் எதிர்க்கட்சி என்ற அந்தஸ்தை தேசிய மக்கள் சக்தியே பெறும் என நம்புகின்றேன்.” – என்றார்.

# ஓட்டோ மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு இருவர் உயிரிழப்பு; ஒருவர் தப்பியோட்டம்



ஹெரணை, பாதுக்க–மொரகஹாஹேன பகுதியில் பொலிஸாரை நோக்கித் துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பியோடிய ஓட்டோ மீது பொலிஸார் துப்பாக்கிச்சூடு நடத்தியதில் இருவர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இன்று அதிகாலை 1.50 மணிய 04▶





# தியத்தலாவை கார் பந்தய விபத்து: விசாரணைக்கு 7 பேர் அடங்கிய குழு

தியத்தலாவையில் கார் பந்தயப் போட்டியின்போது இடம்பெற்ற விபத்து தொடர்பில் விசாரணைகளை முன்னெடுப்பதற்காக இராணுவத்தினரால் 7 பேர் அடங்கிய குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மேஜர் ஜெனரல் ஒருவரின் தலைமையில் இந்தக் குழு நியமிக்கப்பட்டுள்ளது என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் மேஜர் ஜெனரல் ரசிக குமார தெரிவித்துள்ளார்.

சம்பவம் இடம்பெற்றமைக்கான காரணம், பொறுப்புக்கூற வேண்டியவர்கள் மற்றும் பார்வையிடுவதற்காக வருகை தந்தவர்களுக்கான பாதுகாப்பு உரிய முறையில் வழங்கப்பட்டதா போன்ற விடயங்கள் தொடர்பில் இந்தக் குழு ஆராயவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதனிடையே, தியத்தலாவையில் இடம்பெற்ற விபத்து தொடர்பான அறிக்கை எதிர்வரும் 10ஆம் திகதி இராணுவத் தளபதியிடம் கையளிக்கப்படும் என்று இராணுவ ஊடகப் பேச்சாளர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

கடந்த 21ஆம் திகதி தியத்தலாவையில் கார் பந்தயத்தில் இடம்பெற்ற கார் விபத்தில் 7 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட இரு சாரதிகளும் எதிர்வரும் 30ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

# மலையக மக்கள் முன்னணியின் பேராளர் மாநாடு 28 இல் ஹட்டனில்

(நீலமேகம் பிரசாந்த்)

மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டு நிறைவு விழாவும், பேராளர் மாநாடும் எதிர்வரும் 28ஆம் திகதி ஹட்டன் டிகேடபிள்யூ கலாசார மண்டபத்தில் முன்னணியின் தலைவரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான வேலுசாமி இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறவுள்ளது.

நுவரெலியாவில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது மலையக மக்கள் முன்னணியின் தலைவர் இராதாகிருஷ்ணன் எம்.பி. இந்தத் தகவலை வெளியிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"இம்மாநாடானது மலையக மக்கள் முன்னணியின் 35ஆவது ஆண்டைக் கொண்டாடும் ஒரு எழுச்சி மாநாடாகக் காணப்படும். மலையக மக்களின் வாழ்க்கைப் பயணத்துக்குக் கட்சி என்ற அடிப்படையிலும் தொழிற்சங்கம் என்ற அடிப்படையிலும் சேவையாற்றி வரும் மலையக மக்கள் முன்னணி 35 வருடத்தில் கால் பதித்துள்ளமை வரலாற்று மிக்க நிகழ்வாகும்.

அந்நிகழ்வை மிக பிரம்மாண்டமான முறையில் மாற்றத்தை நோக்கிய மலையகம் என்ற தொனிப்பொருளில்



நடத்தவுள்ளோம்.

இந்த மாநாட்டில் கடந்த காலங்களில் மலையக மக்கள் முன்னணியின் எழுச்சி, வளர்ச்சிக்காகப் பாடுபட்ட தொழிற்சங்கத் தலைவர்கள் கௌரவிக்கப்படவுள்ளனர். ஊடகத்துறை சார்ந்தவர்களையும் கௌரவிக்கும் ஒரு நிகழ்வாக இது இடம்பெறும்.

இந்த மாநாட்டில் முக்கிய நிகழ்வாக மலையக மக்கள் முன்னணிக்கு வித்திட்டு அதை விருட்சமாக வளர வழிவகுத்த மலையக மக்கள் முன்னணியின் ஸ்தாபகத் தலைவர் அமரர் சந்திரசேகரனுக்குத் தபால் தலை வெளியிடவும் உத்தேசித்துள்ளோம்." – என்றார்.



# மன்னார் சிமார்ட் நடமாடும் சேவையில் பெரும் எண்ணிக்கையானோர் பங்கேற்பு

(மன்னார்)

ஜனாதிபதியின் வழிகாட்டலில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் மன்னாருக்கு சிமார்ட் எதிர்காலம் நடமாடும் சேவை சனிக் கிழமை மன்னார் நகரசபை மைதானத் தில் ஆரம்பமாகி நடைபெற்றது.

மன்னார் மாவட்ட அரச அதிபர் க.கனகேஸ்வரன் ஏற்பாட்டில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக்கார தலைமையில் நடமாடும் சேவை இடம் பெற்றது.

இந்த நடமாடும் சேவையில் இரா ஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் உள் ளடங்களாக திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள் பாடசாலை மாணவர்கள், இளைஞர் யுவதிகள் கலந்து கொண்டனர்.

நடமாடும் சேவையில் 36 வெளி நாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் கலந்து கொண்டன.

பின்தங்கிய மாணவர்கள் மற்றும் உள்நாட்டு தொழில் முறைமையிலான வேலை வாய்ப்புகளும் குறித்த நடமாடும் சேவையுடாக வழங்க நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டது.

ஜனாதிபதியின் வழிகாட்டலில் தொழில் மற்றும் வெளிநாட்டு வேலை வாய்ப்பு அமைச்சர் மனுஷ நாணயக் காரவின் எண்ணக்கருவில், இராஜாங்க அமைச்சர் ஜகத் புஸ்பகுமாரவின் ஒத்து ழைப்போடு, இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தமானின் பங்குபற்றுதலுடன் நடமாடும் சேவை இரு நாள்கள் இடம்பெற்றன.

இதன்போது தெரிவு செய்யப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் மற்றும் பாடசாலைக ளுக்கான உபகரணங்கள் வழங்கப் பட்டன.










# யாழில் கோர விபத்து! ஓட்டோ சாரதி காயம்!!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம் நகரை அண்மித்த நாலுகால் மட சந்தியில் இன்று மதியம் ஓட்டோ ஒன்றும் பட்டா ரக வாகனம் ஒன்றும் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில் ஓட்டோ சாரதி படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

விபத்து தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

யாழ். மானிப்பாய் காரைநகர் பிரதான வீதியில் நாலுகால்மடம் சந்தியில் அமைந்துள்ள அரைக்கும் ஆலை ஒன்றில் இருந்து பிரதான வீதியில் ஓட்டோ பயணிக்கத் தொடங்கிய நிலையில் பின்புறமாக ஆறுகால்மடம் பகுதியில் இருந்து வருகை தந்த பட்டாரக வாகனம் மோதியது.

இதன்போது ஓட்டோ முற்றாகச் சேதமடைந்தது. ஓட்டோவைச் செலுத்திய ஆறுகால்மடம் பகுதியைச் சேர்ந்த 20 வயதான அஜிந்தன் எனும் இளைஞர் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார்.

இதேவேளை, பட்டா ரக வாகனம் இலங்கை மின்சார சபைக்குச் சொந்தமான மின்கம்பத்துடன் மோதி பகுதியளவில் சேதமடைந்த நிலையில் வாகன சாரதி காயங்களின்றி மீட்கப்பட்டார்.

சம்பவ இடத்துக்கு விரைந்த யாழ். மாவட்ட போக்குவரத்துப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்தனர்.







## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஓட்டோ மீது...

ளவில் மீபே தெலுகெட்டிய பொலிஸ் வீதித் தடுப்பில் ஓட்டோவை நிறுத்துமாறு பொலிஸார் கூறிய போதிலும், ஓட்டோவில் இருந்தவர்கள் பொலிஸார் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்துவிட்டுத் தப்பிச் சென்றுள்ளனர். அப்போது, அந்த ஓட்டோவைத் துரத்திச் சென்று துப்பாக்கிச்சூடு நடத்தியதாகப் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

துப்பாக்கிச்சூட்டில் இருவர் உயிரிழந்துள்ளனர் எனவும், மேலும் ஒருவர் அருகில் உள்ள இறப்பர் தோட்டத்துக்குத் தப்பிச் சென்றுள்ளார் எனவும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்துக்கு அருகில் கைத்துப்பாக்கி ஒன்றும் காணப்பட்டது என்று பொலிஸார் மேலும் குறிப்பிட்டுள்ளனர்.

### வாகன...

மூன்று பேர் படுகாயங்களுக்குள்ளாகிய நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புத்தளத்தில் இருந்து ஆனமடுவ பகுதிக்குச் சென்ற லொறியுடன் ஆனமடுவ பகுதியில் இருந்து புத்தளம் நோக்கிச் சென்ற வான் மோதி விபத்துக்குள்ளா கியுள்ள நிலையில் வானுக்குப் பின்னால் சென்ற மோட்டார் சைக்கிள் லொறியுடன் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்தின்போது வானில் பயணித்த சாரதி உட்பட மூவரில் இருவர் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர் .



ஒருவர் சிறு காயங்களுக்குள்ளாகிய நிலையில் தனியார் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் லொறியின் சாரதியும் பலத்த காயங்களுக்குள்ளாகிய நிலையில் புத்தளம் ஆதார வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளைத் தொடர்ந்தும் மேற்கொண்டு வருவதாகப் புத்தளம் பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.



# ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் நிந்தவூர் மத்திய குழுக் கூட்டம்

(எம்.எம்.றம்ஸீன்)

நிந்தவூர், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மத்திய குழுக் கூட்டம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் பைசல் காசிம் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தேசிய தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் கலந்து கொண்டு சமகால அரசியல் நிலைமை பற்றி அங்கு விளக்கமளித்தார். கேள்விகளுக்கும் பதிலளித்தார்.





# பொத்துவில் பிரதேசத்தில் நடந்த ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(எம்.எம்.றம்ஸீன்)

பொத்துவில் பிரதேச ஒருங் கிணைப்புக் குழுக்கூட்டம் திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் தலைமையில் பொத்துவில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம் பெற்றது.

பொத்துவில் பிரதேச செயலாளர் எம்.ஐ.பிர்னாஸ் ஒருங்கிணைப்பில் இடம்பெற்ற இந்தக் கூட்டத்தில் உதவிப் பிரதேச செயலாளர், உதவி திட்டமிடல் பணிப்பாளர், பொலிஸ் மற்றும் இராணுவ உயர் அதிகாரிகள், திணைக்களங்களின் பொறுப்பு வாய்ந்த தலைவர்கள், உத்தியோகத்தர்கள், பிரதேச சபையின் செயலாளர், சமூக நிறுவனங்களின் தலைவர்கள், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரதிநிதிகள், மத ஸ்தலங்களின் பொறுப்பாளர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.



நமது கருத்து
உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

# வெளியேறும் மனிதவளம்

சிங்கள மற்றும் தமிழ் புத்தாண்டு விடுமுறை வாரத்தில் மாத்திரம் விசேட வைத்தியர்கள் ஏழு பேர் நாட்டை விட்டுத் தப்பியோடி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் என சுகாதார அமைச்சின் உள்ளகத் தகவல்கள் தெரிவிக்கின்றன என்று அதிர்ச்சிச் செய்தி வெளியாகியுள்ளது.

அரச நிதியிலும், செலவிலும் விசேட பயிற்சிகளைப் பெற்றுத் தங்களது வாண்மையைப் பெருக்கிக் கொண்ட விசேட வைத்தியர்களே இவ்வாறு சொல்லிக் கொள்ளாமல் நாட்டைக் கைவிட்டு வெளியேறியுள்ளனர்.

கடந்த வாரத்தினுள் அம்பாந்தோட்டை, பிபில, மெதிரிகிரிய மற்றும் எம்பிலிபிட்டிய வைத்தியசாலைகளின் விசேட மயக்க மருந்து நிபுணர்கள், நுவரெலியா மற்றும் மஹியங்களை வைத்தியசாலைகளின் மகப்பேறியல் விசேட வைத்தியர்கள் மற்றும் மொனராகலை வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவில் உடல் நோய்கள் விசேட வைத்தியர் என ஏழு பேர் இவ்வாறு நாட்டை விட்டுத் தப்பியோடியுள்ளனர் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தற்போது இப்படி 350க்கும் அதிகமான விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு வெளியேறி வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்துள்ளனர் எனப் புள்ளிவிவரத் தகவல் ஒன்று தெரிவிக்கின்றது.

இவ்வாறு விசேட வைத்தியர்கள் நாட்டை விட்டு செல்வதால் வைத்தியசாலைகளில் நோயாளர் பராமரிப்பு சேவைகளை நடத்துவதில் பாரிய சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன எனவும், சத்திர சிகிச்சைகளை காலவரையறையின்றி ஒத்திவைக்க வேண்டியுள்ளதாகவும் சுகாதார அமைச்சின் உள்ளக தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன என்றும் செய்திகள் தெரிவிக்கின்றன.

இதற்கிடையில் -

இலங்கையில் காணப்படும் பொருளாதார சிக்கல்கள் காரணமாக கடந்த இரண்டு வருடங்களில் 25 இலட்சத்து 65 ஆயிரத்து 365 பேர் நாட்டை விட்டு வெளியேறியுள்ளனர் என இலங்கை மத்திய வங்கியின் அறிக்கைகள் சுட்டிக் காட்டுவதாக பேராதனை பல்கலைக் கழகத்தின் பொருளாதார மற்றும் புள்ளி விவரவியல் திணைக்களத்தின் பேராசிரியர் வசந்த அத்துகோரள தெரிவித்தார்.

இவர்களில் வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்றவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 8 ஆயிரத்து 925 ஆகும்.

இது வெளிநாடு சென்றவர்களின் மொத்த எண்ணிக்கையில் 24 வீதமாகும். அதாவது இலங்கையில் இருந்து வெளிநாடு செல்லும் நான்கு இலங்கையரில் ஒருவர் வெளிநாட்டு வேலைகளுக்காகச் செல்கின்றார் என்று அர்த்தம்.

2023ஆம் ஆண்டு வெளிநாட்டு வேலைகளுக்காக நாட்டை விட்டு வெளியேறியவர்களில் சுமார் எழுபது வீதமானவர்களுள் தொழில் ரீதியாக உயர் தகைமை பெற்ற பொறியியலாளர்கள், வைத்தியர்கள், சட்டத்தரணிகள், கணக்காளர்கள் போன்றவர்களும் உள்ளடங்குகின்றனர் எனத் தெரிவித்த பேராசிரியர், கடந்த ஆண்டு வெளிநாட்டு வேலைகளுக்குச் சென்றவர்களில் 34 வீதமானவர்கள் 25-34 வயதுக்கு இடைப்பட்டவர்கள் எனவும் சுட்டிக்காட்டுகின்றார்.

பொருளாதார நெருக்கடி மற்றும் அதனால் விரக்தியின் காரணமாகவே இவர்களுள் பலர் வெளிநாடு சென்றுள்ளனர் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளதாக பேராசிரியர் மேலும் தெரிவித்திருக்கின்றார்.

இவ்வாறு மனித வளம் வெளியேறுவது நாட்டின் விருத்தி, மேம்பாடு, வாழ்க்கைத் தர உயர்வு போன்றுவற்றில் பெரும் பின்னடைவுகளையும் பாதிப்பையும் தரும் என்பது கண்கூடு.

வெளிநாடு சென்று உழைப்போரினால் நாட்டுக்கு அந்நிய செலாவணி வருகின்றது என்று அரசின் ஒரு பகுதியினர் கருதக் கூடும்.

ஆனால் இப்படி சொந்த மனித வளத்தை உலகுக்குத் தாரைவார்த்துக் கொடுத்து அந்நிய செலாவணி தேடுவது என்பது கண்ணை விற்றுச் சித்திரம் வாங்கும் முட்டாள்தனமான செய்கைக்கு ஒப்பானதாகும்.

# அம்புலன்ஸ்களில் 'ஏசி' போடாமல் பயணித்தால் முறையிட அறிவுறுத்து

(அப்துல்சலாம் யாசீம்)

திருகோணமலை மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளுக்குச் சொந்தமான அம்புலன்ஸ்களில் 'ஏசி' போடாமல் நோயாளர்களை ஏற்றிக் கொண்டு வந்தால் உடனடியாக அறிவிக்குமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது.

தற்பொழுது அதிக வெப்பநிலை காரணமாக அம்புலன்ஸ் சாரதிகள் தமக்கு மாத்திரம் 'ஏசி'யை போட்டுக் கொண்டு பின்புறமாக இருக்கும் நோயாளர்களுக்கு 'ஏசி' போடுவதில் என முறைப்பாடுகள் கிடைக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக திருவண்ணாமலை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்கும், அம்புலன்ஸ் சாரதிகளுக்கு பொறுப்பான உத்தியோகத்தருக்கும் குறித்த விடயம் தொடர்பாகத் தெரியப்படுத்தியுள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆகவே இனி வரும் காலங்களில் இவ்வாறான பிரச்சினைகள் நோயாளர்களுக்கு வருவதை தடுக்கும் நோக்கில் அனைத்து அம்புலன்ஸ் சாரதிகளுக்கும் நோயாளர்களை ஏற்றி வரும் போது 'ஏசி' போடுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளது என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவித்தார்.

இனிவரும் காலங்களில் சாரதிகள் 'ஏசி' போடாமல் நோயாளர்களை ஏற்றி வந்தால் உடனடியாக அறிவிக்குமாறும் தெரிவித்துள்ளார்.




# காரைதீவு பிரதேச செயலகத்தில் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(மாளிகைக்காடு)

காரைதீவு பிரதேச செயலக பிரிவின் 2024 ஆம் ஆண்டுக்கான முதலாவது பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் காரைதீவு பிரதேச ஒருங்கிணைப்புக் குழு தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம். முஷாரப் தலைமையிலும், பிரதேச செயலாளர் எஸ். ஜெகராஜனின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.



இதன்போது இவ்வாண்டு நடைமுறைப்படுத்துவதற்காக முன்மொழியப்பட்ட திட்டங்களுக்கான அனுமதியைப் பெற்று கிடைக்கப்பெறும் வளங்களைப் பயன்படுத்தி உற்பத்தியை அதிகரிப்பது தொடர்பில் பேசப்பட்டது.

விவசாயிகளின், அதிகாரிகளதும் வேண்டுகோளுக்கமைவாக நீரியல் உயிரின பிரச்சினைகள் தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட பின்தங்கிய பாடசாலைகளை அபிவிருத்தி செய்வதன் ஊடாகக் கல்வி நடவடிக்கைகளை மேம்படுத்துவது தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது.

ஏனைய அனைத்து திணைக்களங்கள் சார் விடயங்கள் தொடர்பிலும் அவற்றில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வது தொடர்பிலும் இதன் போது விரிவாக ஆராயப்பட்டது.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சட்டத்தரணி எச்.எம்.எம். ஹரீஸ் சார்பில் அவரது மக்கள் தொடர்பாடல் செயலாளர் யூ.எல்.என். ஹுதா உமர், நாடாளுமன்ற உறுப்பினர் டீ. வீரசிங்க சார்பில் அவரது இணைப்பாளர் ஏ.எம். ஜாஹீர், நாடாளுமன்ற உறுப்பினர் த. கலையரசன் சார்பில் காரைதீவு பிரதேச சபை முன்னாள் தவிசாளர் கி. ஜெயசிறில், நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷாரபின் இணைப்பாளர் ஏ.ஏ. அசாம் ஆகியோர் கலந்து கொண்டனர். அத்துடனள் திணைக்கள தலைவர்கள், துறைசார் அதிகாரிகள், பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.



# அன்னையர் ஆதரவுக் குழுக்களை வலுப்படுத்தும் பயிற்சி கருத்தரங்கு

(றியாஸ் ஆதம்)

சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளில் நிறுவப்பட்டுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களை வலுப்படுத்தி ஆரோக்கியமான சமூகத்தைக் கட்டியெழுப்பும் நோக்கில் சுகாதார அமைச்சின் சுகாதாரக் கல்விப் பணியகத்தால் பல்வேறு வேலைத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்த வேலைத் திட்டத்துக்கு அமைவாகக் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் பிராந்திய சுகாதார கல்வி பிரிவால் கல்முனை பிராந்தியத்தில் உள்ள 13 சுகாதார வைத்திய அதிகாரிகள் பிரிவுகளிலும் நிறுவப்பட்டுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களுக்கு பயிற்சி மற்றும் விழிப்புணர்வு கருத்தரங்குகள் நடத்தப்பட்டு வருகின்றன.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களுக்களை வலுப்படுத்தும் நோக்கில் ஏற்பாடு செய்யப்பட்ட பயிற்சி கருத்தரங்கு சனிக்கிழமை பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகத்தில் இடம்பெற்றது.

சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எப்.எம்.உவைஸ் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய தாய் சேய் நலன் பிரிவு பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.றிஸ்பின், மாவட்ட சுகாதார கல்வி அதிகாரி எம்.ஜே.எம்.பைறூஸ், பல் வைத்திய நிபுணர் ஏ.ஆர்.கத்தாபி, மேற்பார்வை பொதுச் சுகாதார பரிசோதகர் எம்.எஸ்.எம்.அப்துல் மலிக் ஆகியோர் வளவாளர்களாக கலந்து கொண்டனர்.

பொத்துவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள அன்னையர் ஆதரவுக் குழுக்களைச் சேர்ந்த சுமார் 70 உறுப்பினர்கள் குறித்த நிகழ்வில் கலந்துகொண்டனர். குறித்த வேலைத் திட்டத்தை முன்னெடுப்பதற்கு யுனிசெப் நிறுவனம் நிதியுதவி வழங்குகின்றமை குறிப்பிடத்தக்கது.



# புத்தளம் தள வைத்தியசாலையில் இரத்த வகைகளுக்குத் தட்டுப்பாடு

(எம்.எச்.எம்.சியாஜ்)

புத்தளம் தள வைத்தியசாலையில் தற்போது இரத்தம் தட்டுப்பாடு நிலவுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே பொது மக்கள் அவசரமாக நேரடியாக வைத்தியசாலைக்கு வருகை தந்தோ அல்லது இரத்ததான முகாம் களை உருவாக்கியோ இரத்த தானம் வழங்கிட உதவுமாறும் வைத்தியசாலை நிர்வாகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக மேலதிக விவரங்களுக்கு வைத்தியசாலை முகாமைத்துவ சேவை அதிகாரி எம்.எம்.எம்.பஸாரத்துடன் 0757007003 எனும் தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.




# பாவனைக்குப் பொருத்தமற்ற பொருள்கள் திடீர் சோதனை நடவடிக்கையில் சிக்கியது!

(நூருல் ஹுதா உமர்)

சுகாதாரமற்ற உணவுப் பொருள்கள் பொது மக்களுக்கு விற்கப்படுவதை தடுத்து உணவுப் பாதுகாப்பு மற்றும் சுத்தமான உணவை பொது மக்களுக்கு உறுதிப்படுத்தல் என்ற நோக்கில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஸஹீலா இஸ்ஸதீனின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலில் சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் எம்.ஜே.கே.எம். அர்ஷாத் காரியப்பர் தலைமையில் தொடர்ந்தும் திடீர் சோதனை நடவடிக்கை சாய்ந்தமருதில் இடம்பெற்று வருகின்றன.

சாய்ந்தமருது பிரதேச சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கெட்டுகள் போன்றவற்றில் சோதனை நடவடிக்கை இடம்பெற்றது.

இதன்போது சாய்ந்தமருதின் பிரபல கடைகளில் பாவனைக்குப் பொருத்தமற்ற பழுதடைந்த தானியங்கள், வண்டுகள் மற்றும் புழுக்கள் நிறைந்த உணவுகள், மனித பாவனைக்குப் பொருத்தமற்ற உலருணவுகள், மனித ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கும் பொருள்கள், முறையான களஞ்சிய வசதிகள் மேற்கொள்ளப்படாத உணவுப் பண்டங்கள் மீட்கப்பட்டன.

கடந்த காலங்களில் சாய்ந்தமருது பிரதேச உணவகங்கள், சந்தை, சில்லறை கடைகள், மொத்த விற்பனை நிலையங்கள், சிறிய சூப்பர் மார்க்கெட்டுகள் போன்றவற்றை பார்வையிட்ட சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி குழுவினர் உரிமையாளர்களுக்கும், உணவு தயாரிப்பவர்களுக்கும் சுகாதார நடைமுறைகளை பேணி உணவுகளை தயாரிக்குமாறும், உணவகங்கள் சுத்தமில்லாது இருத்தல், உணவு கையாளுகையில் முறையான ஒழுங்கீன்மை, நீண்ட நாள்களுக்கு பொருத்தம் இல்லாதவாறு உணவுகளை தேக்கி வைத்தல், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையல் பொருள்களின் தரம் போன்றவற்றை சுகாதார முறைப்படி பேணுமாறும் ஆலோசனை வழங்கினர்.

அறிவித்தல்களைப் பேணி நடக்காத உணவகங்கள் மீது உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் எச்சரித்திருந்தனர். அதன் தொடர்ச்சியாக இந்த சோதனை நடவடிக்கை இடம்பெற்று வருவது குறிப்பிடத்தக்கது.

சாய்ந்தமருது சுகாதார வைத்திய அதிகாரி அலுவலக மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர்களான ஏ.எல்.எம். ஜெரின், ஜே.எம்.நிஸ்தார் அலுவலக உத்தியோகத்தர் எம்.எச்.எம். பிர்தௌஸ் உட்பட பலரும் இந்த திடீர் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டு வருகின்றனர்.




# கல்முனையில் சுகாதார நடைமுறைகளை மீறிய வர்த்தகர்களுக்குச் சட்ட நடவடிக்கை!


(எம்.என்.எம்.அப்ராஸ்)

கல்முனை மாநகர பொதுச் சந்தையில் பெரிய அளவிலான உணவுப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

இதன் போது சுகாதார நடைமுறைகளை மீறிய வர்த்தகர்களுக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது என்று கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம்.அஸ்மி தெரிவித்தார்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் சஹிலா இஸ்ஸடீனின் பணிப்புரைக்கு அமைவாக கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி வைத்தியர் ஏ.ஆர்.எம்.அஸ்மி தலைமையில் மேற்பார்வை பொது சுகாதார பரிசோதகர் ஏ.எம்.பாறூக், பொது சுகாதார பரிசோதகர்களான எம்.ஜுனைடீன், ஜே.எம்.நிஜாமுடீன், ஐ.எல்.எம்.இத்ரீஸ், எம்.ரவிச்சந்திரன் ஆகியோர் பரிசோதனைகளை மேற்கொண்டனர். பொது சந்தையில் உள்ள வர்த்தக நிலையங்கள், மரக்கறி விற்பனை நிலையங்கள், உணவு விற்பனை நிலையங்கள் போன்றவற்றில் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டன.

பொதுச் சந்தை வர்த்தகர்களுக்கு சுகாதார ஆலோசனைகள் வழங்கப்பட்டன. பாவனைக்கு உதவாத மரக்கறி வகைகள் கைப்பற்றப்பட்டன. சுகாதாரத்துக்குப் பொருத்தமற்ற முறையில் காணப்பட்ட வியாபார நிலையங்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டன என்று கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி ஏ.ஆர்.எம். அஸ்மி தெரிவித்தார்.




# மத்திய கிழக்கின் நிலவரத்தை புரிய வைக்கும் "ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்" நூல் வெளியீடு

ஈழத் தமிழர்கள் தம்மைப் பாலஸ்தீன மக்களுக்கு ஒப்பானவர்களாகக் கருதிக் கொள்ளும் ஒரு நிலை இருக்கிறது. பாலஸ்தீன மக்களுக்கு ஆதரவான தொரு போக்கு ஈழத்தில் நெடுங்காலம் நிலவுகிறது. அதேவேளை தமக்கென்று ஒரு நாடற்ற நிலையில் இஸ்ரேலை உருவாக்கிய இஸ்ரேலியர்களிடம் இருந்தும் நாம் கற்றுக்கொள்ள பல விடயங்கள் உண்டென்ற பார்வையும் சிலரால் முன்வைக்கப்படுகிறது.

இந்தச் சிக்கலான அரசியலைப் புரிந்துகொள்ள ஜீவநதி பதிப்பகத்தின் 351 ஆவது வெளியீடாக ஐங்கரன் விக்கினேஸ்வரா எழுதிய 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் வெளியாகியுள்ளது.

உலக அரசியல் சார்ந்த விடயங்களை நாம் அதிகமும் கற்றுக் கொள்வது இன்றைய உலக அரசியலின் போக்கை புரிந்து கொள்ளவும் 'ஓர்மத்தின் உறைவிடம் இஸ்ரேல்' எனும் கட்டுரைத் தொகுப்பு நூல் உதவும் என்று இந்த நூலின் முன்னுரையில் எழுத்தாளர் தீபச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

சர்வதேச விடுதலை போராட்டங்கள் குறித்த ஆழமான புரிதலை எழுத்தாளர் ஐங்கரன் கொண்டிருப்பதற்கு உலக வரலாறு குறித்த அவரது அரசியல் அறிவும், உலக அரசியல் குறித்த அவரது ஆழமான புரிதலும் தான் அடிப்படையானவை.

உலக அரசியலின் முகங்களை, ஆயுத அரசியலின் அர்த்தங்களை, ஒப்பந்தங்களின் உள்ளடக்கங்களை, சமகால உலக அரசியலில் பொதிந்துள்ள தந்திரங்களின் முகங்களை என இவர் தன் எழுத்துக்களின் வழியாக தரும் செய்திகள் மிகவும் அதிர்வு தரக்கூடியவை என்றும் இந்த நூலின் முன்னுரையில் எழுத்தாளர் தீபச்செல்வன் குறிப்பிட்டுள்ளார்.

# வீதியில் அலைந்து திரிந்துவரும் கட்டாக்காலி மாடுகளால் விபத்து!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

அம்பாறை மற்றும் மட்டக்களப்பு மாவட்டங்களின் பல பகுதிகளிலும் உள்ள பிரதான வீதிகளில் கட்டாக்காலி மாடுகளின் தொல்லையால் போக்குவரத்தில் பெரும் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளது.

வாகன சாரதிகளும் பாதசாரிகளும் பாடசாலை மாணவர்களும் பலவிதமான பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இவற்றால் விபத்துகள் ஏற்படும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.

கட்டாக்காலி மாடுகளை மேய்ச்சலுக்கு விடுவோர் பிரதான வீதிகளில் விடுவதால் ஆபத்தான பல சம்பவங்கள் அண்மைக் காலங்களில் இடம்பெற்றுள்ளன.

கல்முனை பொது சந்தையில் மரக்கறி வாங்கிச் செல்வோரின் மரக்கறிகளுக்கும், வாழைப்பழ கடைகளுக்கும் பலத்த சேதத்தையும் இவை விளைவிக்கின்றன.

வீதியில் பயணிக்கும் மோட்டார் சைக்கிள்களுக்கு முன்னால் இவை திடீரென பாய்வதால் விபத்கள் ஏற்படுகின்றன.



கல்முனை மாநகர சபையாலும் ஏனைய பிரதேச சபைகளாலும் இவ்விடயம் தொடர்பாக பலமுறை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் தொடர்ச்சியான நிலையான திட்டமொன்று வகுக்கப்படாமையால் தொடர்ந்தும் இக் கட்டாக்காலிகள் பிரதான வீதிகளிலேயே திரிகின்றன.

இது தொடர்பில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் கூடிய கவனம் செலுத்த வேண்டும் என்று பிரதேச மக்கள் கேட்டுள்ளனர்.



# சமூகத்தின் நலன்கருதி முஸ்லிம் காங்கிரஸுடன் இணைந்து போட்டியிட்டு ஏமாற்றப்பட்டுள்ளோம்!

## நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாட் பதியுதீன் விசனம் தெரிவிப்பு

(எஸ்.அஷ்ரப்கான்)

முஸ்லிம் சமூகத்தின் நலன்கருதி முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை பாது காக்கும் நோக்கில் கடந்த நாடாளு மன்றத் தேர்தலில் முஸ்லிம் காங்கிரஸு டன் இணைந்து போட்டியிட்டு கடைசியில் ஏமாற்றப்பட்டுள்ளோம்.

இவ்வாறு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சியின் தேசியத் தலை வரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்தார்.

பொத்திவில் பிரதேசத்தில் சனிக் கிழமை இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போது அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன் போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

முஸ்லிம் சமூகத்தின் நலன்கருதி முஸ்லிம் பிரதிநிதித்துவங்களை பாது காக்கும் நோக்கில் புத்தளம் மாவட் டத்தில் முஸ்லிம் காங்கிரசோடு சேர்ந்து அவர்கள் சார்ந்த கட்சி ஒன்றில் உடன் படிக்கைகளைச் செய்து தராசு சின்னத் தில் கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டோம். அவ்வாறு போட்டியிட் டதால் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் சார்பாக நிறுத்தப்பட்ட வேட்பாளர் அலி சப்றி றஹீம் வெற்றி பெற்றார்.

எமது கட்சியைச் சேர்ந்த அலி சப்ரி றஹீம் தங்கம் கடத்தியதால் அவருடைய பிரச்சினை தொடர்பாக கட்சி விசாரணை செய்து அவரைக் கட்சியிலிருந்து நீக்கினோம்.

அவரை நீக்கிய அந்த கடிததத்தை் தராசு சின்னத்தின் கட்சிச் செயலாளராக இருந்த ரவூப் ஹக்கிமுடைய உறவினர் நயிமுல்லாவிடம் கொடுத்தோம்.

அதற்கான பதில் கடிதத்தைத் தாருங் கள் என தொடர்ச்சியாக கோரிக்கையும் விடுத்தோம். அவரால் எந்தவிதமான பதிலும் வழங்கப்படாத சந்தர்ப்பத்தில் முஸ்லிம் காங்கிரஸினுடைய தலைவர் ரவூப் ஹக்கிமை மூன்று முறை நேரடி யாகச் சந்தித்து எமது உடன்படிக்கையின் பிரகாரம் செயல்படுங்கள் என தெரிவித்தேன்.

ஆனால் அவர்களிடமிருந்து இதுவரை எந்தவிதமான பதிலுமில்லை. நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி றஹீம் நீதிமன்ற உத்தரவைப் பெற்று தனது உறுப்பினர் பதவியைப் பாது காத்துக் கொண்டிருக்கிறார்.

தேர்தல் காலங்களில் சமூகத்தினு டைய ஒற்றுமை பற்றி பேசிவிட்டு ஒற்றுமையால் பெறப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சமூகத்துக்கு துரோகம் செய்துவிட்டு செல்கின்ற போது ஒற்று மைப்பட்டு செயற்பட்ட இரண்டு கட்சிகள் ஒரு கட்சியினுடைய விடயத்தில் உடன் படிக்கையை மீறுவது பாரிய துரோக மாகும்.

இவ்வாறான பாரிய துரோகத்தை முஸ்லிம் காங்கிரஸ் எமக்கு செய்தது. இவ்வாறு துரோகம் செய்த கட்சியோடு எதிர்காலத்தில் எவ்வாறு இணைந்து செயல்படுவது.

தேர்தலில் போட்டியிட்டு ஆசனங் களை பெறுவதனை மாத்திரம் பிரயோ சனமாக கருத முடியாது தேர்தலின் பின்னரும் சமூகம் சார்ந்து செயல்பட வேண்டிய தேவை இருக்கிறது. அதிக மான நாடாளுமன்ற உறுப்பினர்களை பெறுவதை விட சமூக உணர்வோடும் கட்சியோடும் விசுவாசமானவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாகப் பெற வேண்டும் என்பதில் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுதியாக இருக்கிறது.- என்றார்.

# நிலக்கடலை பயிரிடத் திட்டம்!

(எச்.எம். ஹலால்தீன் )

எதிர்வரும் சிறுபோகத்தை அடிப் படையாகக் கொண்டு வறண்ட வல யத்தில் 15 ஆயிரம் ஏக்கரில் நிலக்கடலை பயிரிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

இதற்காகக் கூடிய விளைச்சலை தரக்கூடிய நிலக்கடலை விதைகளை பயன்படுத்த விவசாய திணைக்களம் தீர்மானித்துள்ளது.

குறைந்த நீர்ப்பாசன வசதிகளை கொண்ட வயல்களில் இந்த திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், அதற்காக விவசாயிகளை ஊக்குவிக்கவும் நட வடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.






# காத்தான்குடி ‘சிமைல்’ அமைப்பால் மாணவருக்குப் பாதணிகள் வழங்கல்

(எம்.ஏ.ஏ.அக்தார்)

காத்தான்குடி ‘சிமைல்’ அமைப்பால் காத்தான்குடி பிரதேசத்தில் வசிக்கும் குறைந்த வருமானம் உடைய மாண வர்களுக்கு பாதணிகள் வழங்கும் நிகழ்வு மீராபாலிகா மகா வித்தியா லயத்தில் இடம்பெற்றது.

‘சிமைல்’ அமைப்பு சமீப காலமாக காத்தான்குடியில் பல்வேறு உதவிகளை மக்களுக்கு வழங்கி வருகிறது.

அதன் தொடரில் ஆண் மற்றும் பெண் உட்பட 21 மாணவர்களுக்கான பாதணிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு அமைப்பின் தலைவர் ஏ.ஆர்.எம்.ரொஸான் தலைமையில் இடம்பெற்றது. இந்த நிகழ்வில் பிரதம




அதிதியாக ஹைஅதுல் ஆலமீன் அமைப்பின் தலைவர் எச்.எம்.ஸ ரஜஹான் கலந்து கொண்டு சிறப்புரை நிகழ்த்தினார்.

அமைப்பின் செயலாளர் அஸீர் அஹமட், பொருளாளர் எம்.எஸ்.எம். நிஸ்பர், உலமாக்கள், மாணவர்கள் நிகழ்வில் கலந்து கொண்டனர்.







# தலைமைத்துவ, உள ஆற்றுப்படுத்தல் பயிற்சியும் சான்றிதழ்கள் வழங்கலும்

(த.சுபேசன்)

சட்டத்துக்கும் மனித உரிமைகளுக் குமான நிலையத்தின் ஏற்பாட்டில் இலவசமாக பயிற்றுவிக்கப்படும் மனித உரிமைகள் டிப்ளோமா கற்கையை பயிலும் மாணவர்களுக்கு மூன்று நாள்கள் தலைமைத்துவ மற்றும் உள ஆற்றுப்படுத்தல் பயிற்சிகள் வழங் கப்பட்டுள்ளன.

சட்டத்துக்கும் மனித உரிமைக ளுக்கான நிலையத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அம்பிகா சிறிதரன் தலை மையில் இடம்பெற்ற வதிவிட தலைமைத் துவ மற்றும் உள ஆற்றுப்படுத்தல் பயிற் சியானது மூன்று தினங்கள் பண்டத் தரிப்பு இறை தியான இல்லத்தில் இடம்பெற்றது. இதன்போது உள ஆற்றுப்படுத்தல் தொடர்பான பயிற்சி நெறிகளை விரிவுரையாளர் புஸ்பகாந் தன் மற்றும் அருட்தந்தை நிர்மல் சுரஞ்சன் ஆகி யோர் வழங்கினர்.

மேலும் தீப்பாசறை பயிற்சி, உடற் பயிற்சி, தற்காப்பு பயிற்சி ஆகியனவும் மனித உரிமைகள் கற்கை மாணவர்க ளுக்குப் பயிற்றுவிக்கப்பட்டது.

வதிவிட பயிற்சியின் இறுதியில் கலந்து கொண்ட மாணவர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கி வைக்கப்பட்டன. சான்றிதழ்களை அருட்தந்தை நிர்மல் சுரஞ்சன் மாணவர்களுக்கு வழங்கினார்.




# நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சீருடை அறிமுகம்

(எஸ். சினீஸ் கான், நூருல் ஹுதா உமர் )

திருகோணமலை பெரிய கிண்ணியா ஆண்கள் வித்தியாலயத்தின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு சீருடை அறிமுக நிகழ்வு நேற்று திங்கட்கிழமை (22) இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ் தௌபீக் கலந்து கொண்டார். கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளர் எம்.எஸ் சஹுதுல் நஜீமுக்கு நினைவுச் சின்னம் இதன்போது வழங்கப்பட்டது.

கல்முனை வலயக்கல்வி அலுவலகத்தில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் (நிருவாகம்) எம்.எச். ஜாபீர், உதவிக்கல்வி பணிப்பாளர்களான யூ.எல். றியால், எம்.எல்.எம். முதர்ரிஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்.

# பரீட்சை ஆணையாளருக்கு நன்றி தெரிவித்த இம்ரான் எம்.பி.

(அபு அலா, ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட மாணவர்களின் பரீட்சை தொடர்பான விசாரணையை திருகோணமலையில் நடத்த ஏற்பாடு செய்தமைக்காக திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப், பரீட்சை ஆணையாளருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இம்முறை உயர்தரப் பரீட்சைக்கு தோற்றிய திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகள் 70 பேரை பரீட்சை தொடர்பான விசாரணைக்கு கொழும்புக்கு வருமாறு பரீட்சை ஆணையாளரால் அறிவிக்கப்பட்டிருந்தது.

பொருளாதார நெருக்கடிமிக்க இக்காலத்தில் பெற்றோர் தமது பிள்ளைகளைக் கொழும்புக்கு அழைத்துச் செல்வதில் பல்வேறு சிக்கல்களுக்கு முகங்கொடுத்தனர்.

இம்ரான் எம்.பி. இது விடயத்தை பரீட்சை ஆணையாளரின் கவனத்திற்கு கொண்டு வந்தார். இதனை செவி மடுத்த ஆணையாளர் குறித்த மாணவிகளின் கொழும்பு விசாரணையை இரத்து செய்து அதனை திருகோணமலையில் நடத்த ஒழுங்கு செய்துள்ளார். இது குறித்தே இம்ரான் எம்.பி. பரீட்சை ஆணையாளருக்கு நன்றி தெரிவித்துள்ளார்.

திருகோணமலை சாஹிரா கல்லூரி மாணவிகள் 71 பேர் இந்த முறை சென் ஜோசப் கல்லூரி பரீட்சை நிலையத்தில் உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றினர்.

இவர்களில் 70 பேருக்கு விசாரணை அழைப்பு கடிதங்கள் கிடைக்கப் பெற்றுள்ளன. எனினும் காரணம் எதுவும் யாருக்கும் புரியவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.





# என்றும் எரிக்க முடியாத மின் அலை நூலகம்...!

## இன்று உலக புத்தக மற்றும் பதிப்புரிமைகள் தினம்

உலக புத்தக மற்றும் பதிப்புரிமை தினத்தை மையப் படுத்திய சிறப்புப் பார்வை. எனது பார்வையில் நாட்டுப் புத்தகங்களின் மையமான நூலக நிறுவனம் இந்த உலகின் மிகப்பெரிய தலைவர்களையும் அறிஞர் களையும் சிந்தனை யாளர்களையும் ஆராய்ச்சியா ளர்களையும் உருவாக்குவதற்கு அடித்தளமாக காணப்படுகிறது.

புத்தகங்கள் நூலகத்தையும் வீட்டையும் அலங் கரிப்பவையல்ல. மாறாக மனிதனின் அறிவு வளர்ச்சியையும் அவனது புதுமையை நோக்கிய தேடல்களையும் அலங்கரிப்பவை. புத்தகம் என்பது புதிய உலகை படைப்பதற்கு மிகச் சிறந்த ஆயுதம். இவ்வாறு மகிமை பொருந்திய புத்தகங்களை கொண்டாடும் முகமாக 1995 ஆம் ஆண்டிலிருந்து வருடந்தோறும் சித்திரை மாதம் 23 ஆம் திகதி உலக புத்தக மற்றும் பதிப்புரிமைகள் தினம் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றது.

ஒருவரின் நடத்தையிலும் வாழ்விலும் மாற் றங்களை ஏற்படுத்தும் சாதனமாகிய புத்தகங்க ளைப் பேணிப் பாதுகாப்பது எமது தலையாய கடமையாகும். இவ் வாறான மகத்தான பணியை நாட்டில் வெற்றிகரமாக முன்னெடுக்கும் நூலக நிறுவனத்தின் புத்தகங்களைப் பாதுகாக்கும் செயற்பாடு பற்றிய அனுபவப் பகிர்வாக இப்பத்தி அமைகின்றது.

ஒரு நூலகம் திறக்கப்பட்டால் ஒரு சிறைச்சாலை மூடப்படும் என்றார் பேரறிஞர் அண்ணா. அந்த வகையில் 2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட நூலக நிறுவனம் இன்று 19 ஆண்டுகள் கடந்து பல்பரிமாணங்களுடன் தனித்துவமாக மிளிர்ந்து நிற்கின்றது. எவ்வித பாகுபாடுமின்றி இலங்கைத் தமிழ் சமூகங்கள் தொடர்பான எல்லா வகையான அறிவுத் தொகுதிகளையும் மரபுரிமைகளையும் ஆவணப்படுத்திப் பாதுகாக்கின்றது.

இவற்றை உலகவாழ் சமுதாயத்தினர் அனைவரும் www.noolaham. org என்ற நூலக வலைத்தளத்தில் இலவசமாக பார்த்துப் பயனடைந்து கொள்ள முடியும். இந்தப் பணியைச் செயற்படுத்தும் இலாப நோக்கமற்ற தன்னார்வத் தொண்டு நிறுவனமாக நூலக நிறுவனம் விளங்குகின்றது.

இலங்கைத் தமிழ் சமூகங்களின் அறிவுத் தொகுதி மற்றும் மரபுரிமைக்குள் உள்ளடங்கும் அம்சங்களில் பிரதானமானது நூல்களாகும். ஆரம்ப காலம் தொட்டு தற்காலம் வரைக்கும் இலங்கை தொடர்பாக

எப்பாகத்திலிருந்தும் அச்சில் வெளிவரும் பல் துறைசார்ந்த நூல்கள் அனைத்தையும் மின் அலை வடிவாக்கி, அவற்றை எவரும் எப்போதும் இணையத் தளத்தில் இலகுவாகப் பெற்றுப் படிப்பதற்கு ஏற்ற வண்ணம் வெளியிடும் சேவையை வழங்கி வருகிறது.

அதாவது இலங்கை சார்ந்து எழுதப்பட்ட நூல்கள், இலங்கை எழுத்தாளர்களால் எழுதப்பட்ட நூல்கள், இலங்கை பதிப்பாளர்களால் பதிப்பிக்கப்பட்ட நூல்கள், இலங்கையிலுள்ள நிறுவனங்களுக்கு ஊடாக வெளியீடு செய்யப்படும் நூல்கள் போன்றவற்றையே நூலக நிறுவனம் தேடிக் கண்டுபிடித்து அழிவடைந்து போகாமல் ஆவணப்படுத்திப் பாதுகாத்து எதிர்காலச் சந்ததி பயன்படுத்தும் வகையில் கையளிக்கும் சேவையை வழங்குகின்றது.

இதனாலேயே இலங்கைத் தமிழ் சமூகத்தினுடைய எழுத்தாவணங்களின் உறைவிடமாகவும், ஓர் அறிவுக் களஞ்சியமாகவும் எனது பார்வையில் நூலக நிறுவனம் காட்சியளிக்கின்றது.

நூலக நிறுவனமானது கள ஆய்வாளர்கள், செயற் றிட்ட பணியாளர்கள் மற்றும் தன்னார்வலர்களுக்கு ஊடாக நூல்களை சேகரிக்கின்றது. இவ்வாறு சேகரிக்கப்படுகின்ற நூல்கள் இலங்கை தொடர்பானது என்பதை உறுதிப்படுத்திய பின்னர் துப்பரவு செய் யப்பட்டு, எண்ணிமப்படுத்தப்பட்டு, ஆவணப்படுத்தப்படும்.

தொடர்ச்சி▼

# என்றும் எரிக்க முடியாத மின் அலை நூலகம்...!

தொடர்ச்சி▲

ஆவணப்படுத்திய அனைத்து நூல்களையும் உடனடியாகப் பதிவேற்றம் செய்வதில்லை. எழுத்தாளர்கள் அல்லது பதிப்பாளர்களின் அனுமதியோடுதான் நூலக வலைத்தத்தளத்தில் நூல்களை பதிவேற்றம் செய்து வருகின்றது.

நூல்களை பதிவேற்ற உரிய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்களை தேடிக் கண்டுபிடித்துத் தொடர்பு கொள்வது இலகுவான காரியமன்று. ஆனாலும் இந்த நிறுவனம் சளைக்காது முயற்சியெடுத்து அனுமதியைப் பெற்றுக் கொள்கின்றது.

இதுவரைக்கும் (21.04.2024) இந்த நிறுவனமானது 8 ஆயிரத்து 392 ஈழத்து எழுத்தாளர்களின் அனுமதியையும் 6 ஆயிரத்து 742 பதிப்பாளர்களின் அனுமதியையும் பெற்றுக் கொண்டு புத்தகங்கள் நூலக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது.

நூலக நிறுவனமானது ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து தற்போது வரைக்கும் பல செயற்றிட்டங்கள் ஊடாகப் பல்துறைசார் நூல்களை ஆவணப்படுத்தியுள்ளது. குறிப்பாக இலங்கை தொடர்பாக அச்சில் வெளிவந்த 18ஆயிரத்து 716 புத்தகங்களை கண்டுபிடித்து மின்வடிவில் நூலக வலைத்தளத்தில் பதிவேற்றியுள்ளது.

பதிவேற்றிய நூல்களைக் காலந்தாழ்த்தாது இலகுவாகத் தேடி வாசிக்கக் கூடிய வசதிகளையும் இந்த நிறுவனம் வாசகர்களுக்கு ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது. வாசகர்கள் நூலக வலைத்தளம் ஊடாக நூல்களை தேடுகின்ற போது புத்தகத்தினுடைய பெயர், எழுத்தாளர்களின் பெயர், பதிப்பாளர்கள், புத்தகம் வெளியிடப்பட்ட ஆண்டு மற்றும் குறிசொற்கள் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு தேடி இலகுவாகப் பெற்றுக் கொள்ள முடியும்.

உதாரணமாக ஹரிஷாந் என்ற எழுத்தாளர் எழுதிய புத்தகத்தை பார்க்க வேண்டுமானால், எழுத்தாளர்களின் பெயரினுடைய முதலெழுத்தை மாத்திரம் அகர வரிசையின் ஒழுங்கு முறைப்படி வடிவமைத்து வைத்திருக்கின்றார்கள்.

அதில் “ஹ” வரிசையில் சென்று இலகுவாக அடையாளம் கண்டு அவர் எழுதிய புத்தகங்களை பார்த்து பதிவிறக்கி வாசிக்க முடியும். அத்தோடு மிக அவசியமான தேவைக்கு ஒரு புத்தகம் தேவைப்பட்டால் எங்கு தேடினாலும் எவ்வளவு பெறுமதியானதாக இருந்தாலும் சிலவேளை கிடைக்காமல் போகலாம். ஆனால் அவ்வாறான மிகப்பெறுமதியான புத்தகங்களை நூலக வலைத்தளத்தில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளக் கூடிய வசதியை அனைவருக்கும் ஏற்படுத்தி கொடுத்திருக்கின்றது.

அதுமட்டுமல்லாது, விழிப்புலனற்றோருக்காக நூல்களை ஒலிப் பதிவு செய்து ஒலி நூல்களாகவும் வாசகர்களுக்கு வழங்குகின்றது.இவ்வாறாக இந்த நிறுவனத்தின் நூல்களை ஆவணப்படுத்தி பாதுகாக்கும் மகத்தான சேவையை உலகவாழ் சமுதாயத்தினர் பயன்படுத்தி வருகின்றனர்.

குறிப்பாகப் பாடசாலை மாணவர்கள், பல்கலைக்கழக மற்றும் கல்வியியல் கல்லூரி மாணவர்கள், ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், ஆய்வாளர்கள் எனப் பலரது கல்வித் தேவைகளையும் அறிவு விருத்தியையும் பூர்த்தி செய்து கொள்வதற்கு இந்த நூல்கள் உறுதுணையாக அமைகின்றது.

நூலகம் வலைத்தளத்தைப் பயன்படுத்துபவர்கள் தமக்கு தேவையான நூல்கள் பற்றி அறிந்து கொள்ளவோ குறிப்பிட்ட தகவல்கள் தேவை போன்ற ஏதாவது உதவிகளுக்கு உசாத்துணைப் பகுதி ஒன்று வடிவமைத்து வைத்துள்ளது. அதற்குள் சென்று குறித்த தேவையை குறிப்பிட்டு மின்னஞ்சல் முகவரியையும் கொடுத்தால் அதற்கான பதிலை நூலக நிறுவனத்தின் பணியாளர்கள் அனுப்புவார்கள்.

ஒவ்வொரு துறை சார்ந்தும் வெளியான எல்லா வெளியீடுகளையும் ஆவணப்படுத்தினால்தான் வாசகர்கள் முழுமையான உச்சப் பயனை அனைவரும் பெற முடியும். இதற்கு எழுத்தாளர்களும் பதிப்பாளர்களும் இந்த நிறுவனத்தோடு கைகோர்ப்பது மிக அவசியமானதாகும்.

நான் அறிந்தவரையில் சில எழுத்தாளர்கள் அல்லது பதிப்பாளர்கள் தங்களது நூல்களை ஆவணப்படுத்திப் பாதுகாப்பதற்காக நூலக நிறுவனத்தை தொடர்பு கொள்வது வரவேற்கத்தக்கது. ஏனைய எழுத்தாளர்கள் மற்றும் பதிப்பாளர்கள் நூலக நிறுவனத்துடன் இணைந்து தமது நூல்களையும் பதிவேற்ற வேண்டுமென்றால் யாழ்ப்பாணம் சுண்டுக்குளியில் அமைந்துள்ள அலுவலகத்திலும் மட்டக்களப்பு அரசடியில் அமைந்துள்ள பிராந்திய அலுவலகத்திலும் நேரடியாகச் சென்று தொடர்பு கொள்ளலாம். அல்லது 9421223 1292, 94761625485 எனும் தொலைபேசி எண்களிலும் noolaham foundation@gmail.com எனும் மின்னஞ்சல் வழியாகவும் தொடர்பு கொள்ளலாம்.

இந்த நிறுவனமானது எழுத்தாவணங்களில் புத்தகத்தை மட்டுமல்ல. ஏனைய எழுத்தாவணங்களான இதழ்கள், பத்திரிகைகள், பிரசுரங்கள், சிறப்பிதழ்கள், நினைவு மலர்கள், அறிக்கைகள் என்பன போன்ற அனைத்தையும் சுருக்கமாக கூறினால் இலங்கை தமிழ் சமூகம் தொடர்பான அத்தனை அம்சங்களையும் ஆவணப்படுத்திப் பாதுகாக்கும் முக்கிய பணியை மேற்கொண்டு வருகின்றது.

இது சம்மந்தமாக ஆவணப்படுத்த விரும்புபவர்களும் இந்த நிறுவனத்தைத் தொடர்பு கொள்ள முடியும்.

அத்தோடு நூலகச் செயற்பாடுகளில் தன்னார்வலர்களாக இணைந்து கொள்ள விரும்புவோரும் நேரிலோ, மின்னஞ்சலூடாகவோ, தொலைபேசியிலோ தொடர்பு கொள்ளமுடியும் என்று அறிந்திருக்கின்றேன்.

2005 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்ட இந்த நூலக நிறுவனத்தின் வலைத்தளத்தை யாரும் எரித்து விடவோ அழித்துவிடவோ முடியாது என்பதால் காலாகாலத்துக்கும் இது பாதுகாப்போடு இருந்து தொடர்ச்சியாகப் பயனளித்துக் கொண்டிருக்கும் என்பதில் மாற்றுக்கருத்தில்லை.

இறுதியாக இன்று உலக புத்தக தினத்தைக் கொண்டாடும் எழுத்தாளர்கள், பதிப்பாளர்கள், புத்தக விற்பனையாளர்கள், வாசகர்களுக்கும் முக்கியமாக மிக மகத்தான சேவையாற்றும் நூலக நிறுவனத்தின் அனைத்து பணியாளர்களுக்கும் நெஞ்சார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றேன்.

**ப. ஜோன் டிலக்ஷன்,**
சமூகவியல் மற்றும் மானிடவியல் துறை.

# இந்தியாவின் வட மாநிலப் பிரதேசங்களை வறுத்தெடுக்கிறது கோடை வெயில் தாக்கம்

## வெப்ப அலை வீசுவதால் பொதுமக்கள் இக்கட்டில் இமயமலையில் வேகமாக உருகும் பனிப்பாறைகள்

புதுடெல்லி, ஏப்.23

இந்தியாவில் வட மாநிலங்களில் கோடை வெயில் தாக்கம் அதிகரித்து வருகிறது. பல்வேறு பகுதிகளில் வெப்ப அலை வீசுவதால் பொதுமக்கள் தவித்து வருகிறார்கள். பகல் நேரங்களில் வெளியில் செல்ல முடியாமல் வீட்டிலேயே முடங்கி உள்ளனர்.

கால நிலை மாற்றம் மற்றும் வெயில் கொளுத்தி வருவதால் இமய மலை பகுதியில் இருக்கும் பனிப்பாறைகள் வேகமாக உருகுவதாக இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனம் (இஸ்ரோ) தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரோ வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறியிருப்பதாவது:-

இமயமலைப் பகுதியில் இருக்கும் ஏரிகளின் விரிவாக்கத்திற்கும் புதிய ஏரிகள் உருவாவதற்கும், பனிப்பாறை விரிவடைதல் வழிவகுக்கிறது. பனிப்பாறைகள் உருகுவதன் மூலம் உருவாகும் இந்த நீர்நிலைகள் பனிப்பாறை ஏரிகள் என்று அழைக்கப்படுகின்றன.



இமயமலைப் பகுதியில் உள்ள நதிகளுக்கு நன்னீர் ஆதாரங்களாக முக்கிய பங்கு வகிக்கின்றன. பனிப்பாறை விரிவடைவதால் ஏரி வெடிப்பு, பெரு வெள்ளங்கள் போன்ற குறிப்பிடத்தக்க அபாயங்களும் ஏற்படுகின்றன. இது பேரழிவு தரும் விளைவுகளை ஏற்படுத்தும்.

மோரைன் அல்லது பனிக்கட்டி போன்ற இயற்கை அணைகள் உடைவதால் பனிப்பாறை ஏரிகள் அதிக அளவு உருகும் நீரை வெளியிடும் போது வெள்ளம் ஏற்படுகிறது. இதன் விளைவாக கீழ்நோக்கி திடீர் மற்றும் கடுமையான வெள்ளம் ஏற்படுகிறது.

கடந்த 1984-ம் ஆண்டு முதல் 2023-ம் ஆண்டு வரையிலான இந்திய இமயமலை ஆற்றுப்படுகைகளின் நீர்ப்பிடிப்புகளை உள்ளடக்கிய நீண்ட கால செயற்கைக்கோள் படங்கள் பனிப்பாறை ஏரிகளில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு இருப்பது தெரிய வந்துள்ளது. 2016-17ம் ஆண்டில் அடையாளம் காணப்பட்ட 10 ஹெக்டேருக்கும் அதிகமான 2,431 ஏரிகளில், 89 சதவீதம் அதாவது 676 பனிப்பாறை ஏரிகள் 1984-ம் ஆண்டில் இருந்து குறிப்பிடத்தக்க வகையில் விரிவடைந்துள்ளன.

கடந்த 38 ஆண்டுகளில் இருமடங்கு வேகத்தில் பனிப்பாறைகள் உருகுவதால், ஏரிகள் சுற்றுச்சூழலில் மாற்றங்கள் ஏற்படுவது மட்டுமல்லாமல், பனிப்பாறை ஏரி வெடிப்பு வெள்ளத்தின் அபாயமும் அதிகரித்துள்ளது.

- இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வயதானவர்களுக்கு வெப்பப் பக்கவாதம் வெயிலின் கோர தாண்டவத்தால் வரலாம்

சென்னை, ஏப். 23

தமிழகத்தில் கோடை வெயிலின் தாக்கம் மார்ச் மாதத்திலேயே தொடங்கி விட்டது. வழக்கமாக ஏப்ரல் மாதத்தில் வெயில் தாக்கம் தொடங்கி மே மாதத்தில் அக்னி நட்சத்திரத்தின் போது வெயிலின் உக்கிரம் உச்சத்தை அடையும்.

ஆனால் இந்த வருடம் கோடை வெயில் முன் கூட்டியே தாக்கி வருவதால் பொதுமக்கள் வாடி வதங்கி வருகின்றனர். பருவகால மாற்றத்தால் சுட்டெரிக்கும் வெயில் கொளுத்தி வருகிறது.

தமிழகத்தின் வட உள்மாவட்டங்களில் இயல்பைவிட 3,4 டிகிரி செல்சியஸ் வெப்பம் அதிகரித்து உள்ளது. இதனால் மக்கள் வெளியில் நடமாட முடியவில்லை.

தமிழகத்தில் அதிகபட்சமாக ஈரோட்டில் 109 டிகிரி வெயில் தாக்கி உள்ளது. சேலத்தில் 107, தர்மபுரி 106 டிகிரி வெயில் கொளுத்தியது.

ஏப்ரல் மாதம் தொடக்கத்தில் இருந்தே வெப்ப அலை வீசி வருவதால்



மக்கள் பகலில் மட்டுமின்றி இரவு நேரத்திலும் உஷ்ணத்தில் அவதிப்படுகிறார்கள்.

14 மாவட்டங்களில் 100 டிகிரிக்கு மேல் வெயில் தாக்கி வருகிறது. வெயில் தாக்கத்தால் மக்கள் வீடுகளில் முடங்கி உள்ளனர். சிறுவர்கள், முதியவர்கள் வெயிலில் செல்வதை தவிர்த்து வருகின்றனர்.

வெயிலின் தாக்கம் ஜூன் மாதம் வரை இருக்கும் என்று வானிலை ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். தமிழகம் மட்டுமின்றி பிற மாவட்டங்களிலும் வெயில் அதிகமாக இருப்பதால் வானிலை ஆய்வு மையம் எச்சரிக்கை விடுத்துள்ளது. பள்ளிகளுக்கு விடுமுறை விடப்பட்டுள்ளது. பகலில் வெளியே வரவேண்டாம் என அம்மாநில அரசுகள் அறிவித்துள்ளன. வெயிலின் கோர தாண்டவத்தை தாங்க முடியாமல் உயிர் இழப்பும் ஏற்பட்டுள்ளது.

தமிழகத்தில் பொது மக்கள் கோடை வெயில் தாக்கத்தால் பாதிக்கக்கூடாது என்பதற்காக அரசு மருத்துவமனைகள், ஆரம்ப சுகாதார நிலையங்களில் முன் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

வயதானவர்கள், இணை நோய் உள்ளவர்களுக்கு வெப்ப பக்கவாதம் (ஸ்ட்ரோக்) ஏற்படக்கூடும்.

வெப்ப பக்கவாதம், மயக்கம், சோர்வு ஏற்படுவோருக்கு உடனடியாக சிகிச்சை அளிக்க சுகாதாரத்துறை முன் எச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

தமிழகத்தில் வழக்கத்திற்கு மாறாக வெப்பதாக்குதல் அதிகரித்து வருவதால் சென்னை வானிலை மையமும் பொதுமக்களுக்கு அவ்வப்போது முன்னெச்சரிக்கை செய்து பாதுகாப்பாக இருக்க அறிவுறுத்தி வருகின்றது.



# மலேசியாவில் இரு ஹெலிக்கொப்டர்கள் வானில் மோதி விபத்து; பத்துப் பேர் சாவு!

மலாய், ஏப். 23

மலேசியாவில் கடற்படை தினத்தின் ஒத்திகையின்போது இரு ஹெலிக் கொப்டர்கள் மோதிய விபத்தில் 10 பேர் உயிரிழந்தனர்.

மலேசியாவில் கடற்படை தினத்தின் 90 ஆம் ஆண்டு நிகழ்ச்சிகாக நடந்த ஒத்திகையின்போது 2 ஹெலிக் கொப்டர்கள் நடுவானில் மோதி விபத் துக்குள்ளாயின. மலேசியாவின் பெரக் பகுதியில் உள்ள இராணுவத் தளத்தில் நடந்த ஒத்திகையின்போது இந்த விபத்து நிகழ்ந்துள்ளது. இரு ஹெலிக் கொப்டர்களில் பயணித்த கடற்படை ஊழியர்கள் உள்ளிட்ட 10 பேர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர். இந்த விபத்தைத் தொடர்ந்து உடல்களை மீட்கும் பணிகள் துரிதமாக மேற்கொள் ளப்பட்டு வருகின்றன.

காலை 9 மணியளவில் பயிற்சி யில் ஈடுபட்டிருந்த போது இந்த இரு ஹெலிக்கொப்டர்களும் மோதி விபத் துக்குள்ளாகின். இது தொடர்பான வீடியோ சமூக வலைதளங்களில் வைரலாகியுள்ளது.

மலேசிய கடற்படை தினத்தின் 90ஆம் ஆண்டு நிகழ்ச்சிக்காக நடந்த ஒத்திகையின்போது இந்த கோர விபத்து ஏற்பட்டுள்ள சம்பவம் அந்நாட்டு மக்களிடையே சோகத்தை ஏற்படுத்தி உள்ளது.

# இரு இந்திய மாணவர்கள் அமெ. கார் விபத்தில் பலி

## அரிசோனா மாகாணத்தில் நடந்த பயங்கரம்




நியூயோர்க்,ஏப்.23

அமெரிக்காவின் அரிசோனா மாகாணத்தில் பீனிக்ஸ் சிட்டி நகரில் கடந்த சனியன்று கார் ஒன்றில் பயணம் செய்த இந்திய மாணவர்கள் இருவர் எதிர் திசையில் இருந்து விரைவாக வந்த மற்றொரு காருடன் மோதி விபத்துக்குள்ளானதில் உயிரிழந்த னர்.

இந்தியாவின் தெலுங்கானாவை சேர்ந்த மாணவர்கள் முக்கா நிவேஷ் (வயது 19) மற்றும் கவுதம் பார்சி. நிவேஷ், கரீம்நகர் மாவட்டத்தின் ஹுசூராபாத் நகரை சேர்ந்தவர். கவுதம், ஜங்காவன் மாவட்டத்தின் ஸ்டேசன் கான்பூர் நக ரைச் சேர்ந்தவர்.

அவர்கள் இருவரும் அமெரிக்கா வின் அரிசோனா பல்கலைக்கழகத்தில் கணினி அறிவியல் பிரிவுக்கான பொறியியல் படிப்பைப் படித்து வந் துள்ளனர்.

அரிசோனா மாகாணத்தில் பீனிக்ஸ் சிட்டி நகரில் கார் ஒன்றில் இருவரும் பயணம் செய்து கொண்டிருந்தனர். அப்போது, எதிர் திசையில் இருந்து விரைவாக வந்த மற்றொரு கார் ஒன்று அவர்களுடைய கார் மீது மோதி விபத் திற்குள்ளானது. இந்த மோதலில், இந்திய மாணவர்கள் 2 பேரும் உயிரி ழந்தனர். விபத்து பற்றிய தகவல் அறிந்ததும் அரிசோனா பொலிஸ ார்சம்பவ பகுதிக்கு சென்று உடல்களை கைப்பற்றினர்.

இதன்பின்னர், அவர்கள் இருவரும் அடையாளம் காணப்பட்டனர். இந்த விபத்தில், இவர்கள் சென்ற கார் மீது மோதிய வாகனத்தின் ஓட்டுநருக்கு காயம் ஏற்பட்டு உள்ளது. எனினும், அவர் மருத்துவமனையில் சிகிச்சை முடிந்து வீடு திரும்பி விட்டார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்து ஏற்பட்டதற்கான காரணம் பற்றி விசாரணை நடந்து வருகிறது. அவர்களின் மறைவுக்கு அரிசோனா பொலிஸார் இரங்கல் வெளியிட்டனர்.

பக்கங்கள் - 4

# கனடா முரசு

செவ்வாய்க்கிழமை | 23/04/2024

## சீனாவுக்கான கனடியத் தூதுவர் கொங் பியுவ் பதவி விலகினார்

ஒன்ராரியோ,ஏப்ரல் 23

சீனாவுக்கான கனடியத் தூதுவராக பணியாற்றி வந்த கொங் பியுவ் தமது பதவியலிருந்து C2▶

## ‘போரின் சாட்சியம்’ நூல் வன்கூவரில் வெளியீடு!

### ஊடகவியலாளனின் நேரடி அனுபவப் பகிர்வு

பிரிட்டிஷ் கொலம்பியா, ஏப்ரல் 23

ஈழநாதம் பத்திரிகையின் அலுவலகச் செய்தியாளராக கடமையாற்றிய சுரேன் கார்த்திகேசுவின் “போரின் சாட்சியம்“ என்கிற நூல் ஏப்ரல் 27ஆம் திகதி வென்கூவர் நகரில் வெளியிடப்படவுள்ளது.

இறுதிப் போரின் போது இடம்பெற்ற நிகழ்வுகளை C2▶




# கனடியத் தமிழர் பேரவையின் தலைவர்

# ரவீனா ராஜசிங்கம் பதவி விலகுகிறார்

## அரசியல் தளத்தில் தமது பயணத்தை மேற்கொள்வதற்காக



ஒன்ராரியோ, ஏப்ரல் 23

கனடியத் தமிழர் பேரவையின் தலைவர் ரவீனா ராஜசிங்கம் அவர்கள் தமது பதவியிலிருந்து விலகுவதாக அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 22ஆம் திகதி வெளியிட்டுள்ள கடிதத்தில், அரசியல் தளத்தில் தமது பயணத்தைத் தொடர்வதற்காகக் கனடியத் தமிழர் பேரவையின் தலைவர் பதவியில் இருந்து விலகுகின்ன்ஆர் எனக் குறிப்பிட்டுள்ளார்.

தாம் தலைவராகப் பதவி வகித்த காலத்தில் தமிழ் கலாசாரம் மற்றும் கனடாவில் சமுதாயத்தின் நலனை மேம்படுத்துவதில் அர்ப்பணிப்புடன் செயற்பட்டார் என அவர் தெரிவித்துள்ளார்.

பதவியில் இருந்து விலகினாலும், அவர் தொடர்ந்து கனடியத் தமிழர் பேரவையின் செயற்பாட்டிற்கு ஒத்துழைப்பு வழங்குவார் எனவும் கூறியுள்ளார்.

பிக்கரிங்-அக்ஸ்பிரிட்ஜ் தொகுதியின் கன்சர்வேட்டிவ் கட்சியின் சார்பில் அவர் தேர்தலில் போட்டியிடத் திட்டமிட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது. C2▶

## வைத்தியசாலையில் ஈழவேந்தன்



ஒன்ராரியோ, ஏப்ரல் 23

தமிழ் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான ஈழவேந்தன் அவர்கள் சுகவீனம் காரணமாக டொரன்டோவில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. C2▶

## சூரிய கிரகணத்தை ஒட்டிய கண் பாதிப்புடன் 28 பேர்!

### கியூபெக்கில் மட்டும் பதிவு

கியூபெக், ஏப்ரல் 23

கியூபெக்கில் சூரிய கிரகணத்துடன் சம்பந்தப்பட்டதாக கண் பாதிப்பு குறித்த 28 சம்பவங்கள் பதிவாகியுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது. C2▶



# ஹமாஸின் தாக்குதலை புகழுந்துரைக்கும் கோஷங்கள் குறித்து விசாரணை ஆரம்பம்



ஒன்ராரியோ, ஏப்ரல் 23

ஒக்டோபர் 7ஆம் திகதி ஹமாஸ் நடத்திய தாக்குதலை புகழுரைக்கும் வகையில் நாடாளுமன்றத்திற்கு அருகில் எழுப்பப்பட்ட கோஷம் குறித்து ஒட்டாவா பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

வார இறுதியில் பலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்து வார இறுதியில் இடம்பெற்ற போராட்டத்தின் போதே இந்த கோஷம் எழுப்பப்பட்டதாகவும், அது தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ள என ஒட்டாவா பொலிஸ் பிரதான தெரிவித்துள்ளார்.

சனிக்கிழமை இடம்பெற்ற இந்தப் போராட்டம் குறித்து நகரத்தின் வெறுப்பு மற்றும் பாராபட்சங்களை விசாரிக்கும் குழுவிற்குக் கிடைத்த முறைப்பாடு களையடுத்தே இந்த விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பலஸ்தீனத்திற்கு ஆதரவு தெரிவித்து இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்ட நபர் ஒருவர், ஒக்டோபர் 7ஆம் திகதி நடத்தப்பட்ட தாக்குதலைப் புகழ்ந்து பேசியுள்ளமையுடன், எமது எதிர்ப்புத் தாக்குதல்கள் நாம் விடுதலையாகிவிட்டமைக்கான சான்று எனவும் தெரிவித்திருந்தார்.

---

**கனடிய...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

எனினும், கனடியத் தமிழர் பேரவையிடமிருந்து புதிய தலைவர் தொடர்பில் இதுவரை எவ்வித தகவல்களும் வெளியிடப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

உலகத் தமிழர் பேரவையுடன் இணைந்து 'இமாலயப் பிரகடனம்' சார்ந்து செயற்பட்டு வருவது தொடர்பில் ரவீனா ராஜசிங்கம் உள்ளிட்ட கனடியத் தமிழர் பேரவையின் நடப்பு நிர்வாக உறுப்பினர்கள் மீது தொடர்ந்தும் விமர்சனம் முன்வைக்கபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

---

**வைத்தியசாலையில்...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

92 வயதான ஈழவேந்தன் அவர்கள் கடந்த பல வருடங்களாக கனடாவில் வசித்து வருகின்றார்.

1972ஆம் ஆண்டு முதல் தமிழ் தேசிய அரசியலில் ஒரு முக்கிய குரலாக அவர் இருந்தமை குறிப்பிடத்தக்கது.

---

**'போரின் சாட்சியம்'...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

படங்களுடன் பதிவு செய்யும் நூலாக முள்ளிவாய்க்காலில் மே 17, 2009 வரை பயணித்து ஒரு போர்க்கால ஊடகவியலாளனின் வாக்குமூலம் என்ற இந்த நூல் அமைவதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, இந்த நூலின் முதற் பிரதியை கனடிய நாடாளுமன்ற உறுப்பினரும், பழங்குடி விவகாரங்கள் நலன் பேண் அமைச்சருமான கெரி ஆனந்த சங்கரியிடம், நூலாசிரியர் சுரேன் கார்த்திகேசு கையளித்துள்ளார் என தேசியம் என்கிற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்த நூல் மே 12ஆம் திகதி சுவிட்சர்லாந்தில் வெளியிடப்படவுள்ளதுடன், மேலும் பல புலம்பெயர் நாடுகளில் நூல் வெளியிடப்படவுள்ளதாக நூலாசிரியர் சுரேன் தெரிவித்துள்ளார்.

---

**சூரிய கிரகணத்தை...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஏப்ரல் 17 ஆம் திகதி வரை இந்த 28 சம்பவங்களும் பதிவாகியுள்ளன எனவும், இதில் கண் மண்டல பாதிப்பு, வரண்ட கண்கள் போன்றவை உள்ளடங்குகின்றன எனக் கியூபெக் சுகாதாரத் திணைக்களம் தெரிவிக்கின்றது.

வெறும் கண்களால் சூரிய கிரகணத்தைப் பார்ப்பதனைத் தவிர்க்குமாறு பல்வேறு தளங்களிலும் எச்சரிக்கை வெளியிட்ட போதிலும், சிலர் அதனைப் பின்பற்றவில்லையென கியூபெக் சுகாதாரத் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இந்த கண் பாதித்தவர்களின் எண்ணிக்கை சில வேளைகளில் அதிகரிக்கக் கூடிய சந்தர்ப்பம் உள்ளதாகவும் சுகாதாரத் திணைக்களம் சந்தேகம் வெளியிட்டுள்ளது.

---

**சீனாவுக்கான...**

(C1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

விலகி, சீனாவிற்கு திரும்பிச் சென்றுள்ளார் என ரொய்ட்டர் செய்தி சேவையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

2019ஆம் ஆண்டு முதல் தூதுவராக பணியாற்றி பியுவ் திடீரென விலகிச் சென்றமைக்கான காரணங்கள் எதுவும் தெரிவிக்கப்படவில்லை.

ஒட்டாவாவில் அமைந்துள்ள சீனத் தூதரகத்தை தொடர்பு கொண்ட போதிலும், ரொய்ட்டர் செய்தி சேவைக்கு இது குறித்து விவரங்கள் எதுவும் கிடைக்கவில்லை என அந்தச் செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2018ஆம் ஆண்டு முதல் கனடாவுக்



கும், சீனாவுக்கும் இடையிலான இராஜதந்திர உறவுகளில் முரண்பாடு நிலவி வருகின்றது.

சீனாவின் முன்னணி தொலைத் தொடர்பு நிறுவனத்தின் பிரதம நிதி நிறைவேற்றதிகாரியை அமெரிக்காவின் பிடியாணைக்காக, கனடாவில் வைத்து கனடியப் பொலிஸார் தடுத்தமையைடுத்து, இரு கனடியர்களை சீனா கைது செய்து தடுத்து வைத்தமை குறிப்பிடத்தக்கது.

# டொரன்டோவில் மூன்று திரையரங்குகளில் மே 10 ஆம் திகதி முதல் ‘ஊழி’ திரைப்படம்

ஒன்ராரியோ, ஏப்ரல் 23

ரஞ்சித் ஜோசப் அவர்களினால் எழுதி இயக்கப்பட்ட ‘ஊழி’ என்கிற திரைப்படம் மே மாதம் 10ஆம் திகதி முதல் டொரன்டோவில் மூன்று திரையரங்குகளில் திரையிடப்படவுள்ளது.

2009ஆம் ஆண்டுக்கு முன்னர் போரின் மத்தியிலும், வாழ்க்கை தரத்திலும், கலாசார மேன்மையிலும் முன்னுதாரணமாக இருந்த தமிழர் நிலம் இலங்கை அரசாங்கத்தின் ஆட்சியின் கீழ் இருண்ட ஊழிக்காலத்துக்குள் மூழ்கிப் போகும் ஊழியே இது என திரைப் படத்திற்கு இயக்குனர் ரஞ்சித் ஜோசப் விளக்கமளித்துள்ளார்.

ஊழி திரைப்படம் மே 10ஆம் மாலை 7 மணிக்கும், 11ஆம் திகதி பிற்பகல் 1.30இற்கும் வூட்சைட் சினிமாவிலும், மே 11ஆம் திகதி மாலை 4 மணிக்கு யோர்க் சினிமாவிலும், மே 12ஆம் திகதி பிற்பகல் 12:45இற்கு அல்பியன் சினிமாவிலும் திரையிடப்படவுள்ளது.

இதுதவிர, புலம்பெயர் தமிழர்கள் வாழும் பல நாடுகளிலும், கனடாவின் பல மாகாணங்களிலும் இந்த திரைப்படத்தை திரையிடத் திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகின்றது.






# கனடாவில் பிளாஸ்டிக் தயாரிப்பு, மாசு குறித்த தேசியப் பதிவை உருவாக்குவதற்கான திட்டம்



ஒன்ராரியோ, ஏப்ரல் 23

கனடாவில் பிளாஸ்டிக் தயாரிப்பு, மாசு குறித்த தேசியப் பதிவை உருவாக்குவதற்கு கனடா திட்டமிட்டுள்ளது.

பிளாஸ்டிக் கழிவுகளை முடிவுறுத்துவதற்கான உலகளாவிய உடன்படிக்கை ஒன்றுக்கான அடுத்த சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்கவுள்ள நிலையிலேயே கனடிய சுற்றுச்சூழல் அமைச்சர் ஸ்டீவன் கில்போல்ட் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார்.

2015ஆம் ஆண்டின் காலநிலை மாற்றம் தொடர்பான பெரிஸ் உடன்படிக்கையைப் போன்ற உலக பிளாஸ்டிக் பயன்பாடு தொடர்பான உடன்படிக்கையை கொண்டு வருவதற்கு உலக நாடுகளின் தலைவர்களுடன் கனடா பேச்சுவார்த்தைகளை முன்னெடுக்கவுள்ளது.

இதன் முதல் கட்டமாக, கனடாவில் தயாரிக்கப்படும் பிளாஸ்டிக் பொருள்கள் மற்றும் அதற்கு என்ன நடக்கின்றது என்பது தொடர்பில் சிறந்த புரிந்துணர்வை பெற்றுக்கொள்ள கனடிய அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

# துறைமுகத் தொழிற்சங்க நடவடிக்கை; விசாரணைக்கு ஆணைக்குழு நியமனம்




பிரிட்டிஷ் கொலம்பியா ஏப்ரல் 23

2023ஆம் ஆண்டு பிரிட்டிஷ் கொலம்பியாவின் கெட்டினோவ் பகுதியில் இடம்பெற்ற துறைமுகத் தொழிற்சங்க நடவடிக்கை குறித்து விசாரணை செய்யப்படும் என மத்திய தொழில் அமைச்ச சீமஸ் ஒ'ரீகன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து ஆழமாக விசாரிப்பதற்கு விசாரணை ஆணைக்குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளதாக மத்திய தொழில் அமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

2023ஆம் ஆண்டு ஜுலை மாதம் இரண்டு வாரங்களுக்கு இடம்பெற்ற இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையால் பொருளாதார பாதிப்பு ஏற்பட்டதாக அந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இந்தத் தொழிற்சங்க நடவடிக்கையின் போது இரு தரப்புக்கும் இடையில் மத்தியஸ்தம் பேசுவதற்காக நியமிக்கப்பட்டிருந்த மத்தியஸ்தர் வின்ஸ் ரெடியே இந்த ஆணைக்குழுவின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார் எனத் தொழில் அமைச்சர் தெரிவித்துள்ளார்.

# புவியைப் பாதுகாப்பதற்கான எமது பணியை மீளுறுதி செய்வதாக பிரதமர் ட்ரூடோ செய்தி

ஒன்ராரியோ, ஏப்ரல் 23

சுவாசிப்பதற்கு காற்றையும், பருகுவதற்கு நீரையும், உண்பதற்கு உணவையும் தரும் இந்தப் பூமியைக் கொண்டாடும் இந்த வருடத்தின் புவி தினத்தில், இந்தப் புவியைப் பாதுகாப்பதற்கான எமது பணியை நாம் மீளுறுதி செய்கின்றோம் என கனடியப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

உலக புவி தினத்திற்காக கனடிய பிரதமரின் அலுவலகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'கனடா நமது கடற்கரையோரங்களில் இருந்து – உலகின் மிக நீளமான – வடக்கு பனிப்பாறைகள் மற்றும் மூச்சடைக்கக்கூடிய மலைத்தொடர்கள் வரை இயற்கை அதிசயங்களைக் கொண்ட ஒரு நாடு. ஆனால் காலநிலை மாற்றம், பல்லுயிர் இழப்பு மற்றும் மாசுபாடு ஆகியவை நமது சுற்றுச்சூழல் அமைப்புகளை பெருகிய முறையில் அச்சுறுத்துவதால், இந்த இயற்கையின் அன்பளிப்பினைப் பாதுகாப்பது முன்னெப்போதையும் விட முக்கியமாக மாறியுள்ளதை நாம் அறிவோம்' என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

# பொதுப் போக்குவரத்து ஊழியர்களின் வேலைநிறுத்த முன்னறிவிப்பு வாபஸ்!

கனடாவின் பொதுப் போக்குவரத்துத்துறை பணியாளர்கள் நேற்று நள்ளிரவிலிருந்து வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடவிருந்தனர் என அறிவிக்கப்பட்டது. எனினும், போக்குவரத்து ஏஜென்சியுடன் கடைசி நிமிட ஒப்பந்தம் போடப்பட்டு இணக்கம் ஏற்பட்டமையால் வேலைநிறுத்தம் கைவிடப்பட்டது.

ரி.ரி.சீ. போக்குவரத்து சேவையின் தொடர்பாடல், இலத்திரனியல் மற்றும் சமிக்ஞை பணியாளர்களே இவ்வாறு தொழிற்சங்கப் போராட்டத்தில் குதிக்க உள்ளனர் என்று அறிவித்திருந்தனர்.

சுமார் 650 பணியாளர்கள் இவ்வாறு பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட உள்ளனர் என முதலில் அறிவிக்கப்பட்டது.

தமது கோரிக்கைகளுக்கு உரிய தீர்வு வழங்கப்படாவிட்டால் போராட்டம் முன்னெடுக்கப்படும் எனவர்கள் தரப்பில் அறிவிக்கப்பட்டது.

உள்ளூர் கனடிய பொது ஊழியர் சங்கம் (CUPE) மற்றும் TTC ஆகியவற்றுக்கு இடையேயான பேச்சுவார்த்தை தோல்வியுற்றால் நள்ளிரவில் ஊழியர்கள் வேலையை விட்டு வெளியேறும் நிலை ஏற்பட்டிருந்தது.

இரு தரப்பினரும் பிப்ரவரி மாதம் முதல் பேச்சுவார்த்தை நடத்தி வந்தனர்.



இப்போது, கடைசி நேரத்தில் இணக்கம் ஏற்பட்டிருக்கின்றது.

இப்போது ஏற்பட்டுள்ள இணக்கத்தை அங்கீகரிக்கும் விதத்தில் யூனியன் உறுப்பினர்கள் இப்போது வாக்களிக்க வேண்டும்.